

## அற்புதத் திட்டங்கள் பல தந்த
# நம் அருமை முதல்வர் பல்லாண்டு வாழ வாழ்த்துப்பண் பாடுவோம்!

**இந்திய நாட்டின் இணையற்ற முதலமைச்சர், தாய்த் தமிழ்நாட்டின் தலைசிறந்த முதலமைச்சர்களில் ஒருவர். முத்ததமிழறிஞர் கலைஞர், அன்னை தயாளு அம்மையாரின் அருமைத் திருமகனார் திராவிட நாயகர் - சமூக நீதிக்கான சரித்திர நாயகர் நம் இதயங்களில் எல்லாம் இன்பம் கிளர்ந்தெழச் செய்யும் பாசத்தின் இனிய தளபதியார் அவர்களின் 71 வது பிறந்த நாள் ! மார்ச் திங்கள் முதல்நாள்.**

1967 ஆம் ஆண்டில் 14 வயதில் கோபாலபுரத்தில் இளைஞர் தி.மு.க. என முதன் முதலில் உருவாக்கினார் - தளபதி. அதுவே பின்னர் - கழக இளைஞரணி உருவாகக் களமாய் காரணமாய் அமைந்தது! மதுரை ஜான்சிராணி பூங்கா - அங்கேதான் 1980ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 20 ஆம் நாள் கழகத்தின் இளைஞரணி முதன் முதல் புதிய அமைப்பாக உருவெடுத்தது.

“மதுரையிலே அரும்பிய இந்த அணி மாநிலம் முழுவதும் வளர வாழ்த்துகிறேன்” என முத்தமிழறிஞர் அன்று மொழிந்தது போல் எத்திக்கிலும் எழுந்து சிறந்தது இளைஞரணி; அதை வளர்த்த பெருமை நம் தளபதி அவர்களுக்கே உண்டு !

**தளபதி அவர்களை -**
**அணிசெய்த பொறுப்புகள்!**

1966 இல் கோபாலபுரம் இளைஞர் திமுக, 1967இல் பகுதிப் பிரதிநிதி, 1969இல் மாவட்ட பிரதிநிதி, 1982இல் இளைஞர் அணிச்செயலாளர், 1989இல் முதன்முதல் ஆயிரம் விளக்குத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர். நான்கு முறை ஆயிரம் விளக்கு தொகுதியிலும், மூன்று முறை கொளத்தூர் தொகுதியிலும் பேரவை உறுப்பினர்.

1996இல் சென்னை மாநகர மேயர், 2003இல் துணைப் பொதுச் செயலாளர், 2006இல் உள்ளாட்சித்துறை அமைச்சர், 2008இல் கழகப் பொருளாளர். 2009இல் துணை முதலமைச்சர், 2016இல் எதிர்க்கட்சித் தலைவர், 2017இல் கழகச் செயல் தலைவர், 2018இல் கழகத் தலைவர், 2021இல் கழகத்தின் மூன்றாவது முதலமைச்சர்.

**சாதனை திட்டங்கள் படைத்த**
**சரித்திர நாயகன்**

2.14 கோடி குடும்பங்களுக்கு கொரோனா நிவாரணமாக 4000 ரூபாய், மாதம் ரூ.900 சேமிக்கும் வகையில், பெண்களுக்கும், மாற்றுத்திறனாளிகளுக்கும், திருநங்கையருக்கும் அரசுப் பேருந்துகளில் கட்டணமில்லா விடியல் பயணம். கூட்டுறவு வங்கிகளில் 5 பவுன் வரை நகைக்கடன் ரத்து. சுய உதவிக் குழு மகளிர்க்கு ரூ.2 ஆயிரம் கோடி கடன்கள் ரத்து.

மக்கள் குறைகளைத் தீர்க்க “ உங்கள் தொகுதியில் முதலமைச்சர் “ புதிய துறை உருவாக்கம். மக்களுடன் முதல்வர் எனும் மாபெரும் திட்டம், பள்ளிக் குழந்தைகளுக்கான புரட்சித் திட்டம் காலைச் சிற்றுண்டி,

இரண்டு இலட்சம் விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்புகள், பட்டப்படிப்பில் சேரும் அரசுப் பள்ளி மாணவியருக்கு மாதம் 1000 ரூபாய் புதுமைப் பெண் திட்டம் - வரும் ஆண்டு முதல் மாணவர்களுக்கும் மாதம் 1000 ரூபாய் வழங்கும் திட்டம். மக்களைத் தேடி மருத்துவம் திட்டம். இல்லம் தேடிக் கல்வி திட்டம்.



அமைச்சர்
**கே.என்.நேரு**
கழக முதன்மைச் செயலாளர்

**நான் முதல்வன் திட்டம்!**

இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48 திட்டம். விருதுகள் பெறும் எழுத்தாளர்களுக்குக் கனவு இல்லம் திட்டம். அன்னைத் தமிழில் அர்ச்சனை திட்டம் அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் நியமனம். ரூ.3000 கோடி மதிப்பிலான கோவில் நிலங்கள் மீட்பு. தமிழுக்கும், தமிழர்க்கும் வாழ்நாள் முழுவதும் தொண்டாற்றிய சாதனையாளர்க்கு, “**தகைசால் தமிழர்** “ விருது. தமிழ்நாடு அரசின் அனைத்துப் போட்டித் தேர்வுகளிலும் தமிழ் மொழி பாடத்தாள் கட்டாயம். தமிழ்த் தாய் வாழ்த்து மாநிலப் பாடலாக அறிவிப்பு. உக்ரைன் போரால் பாதிக்கப்பட்ட மருத்துவ மாணவர்கள் மீட்பு. மகளிர் அரசு ஊழியர்க்கு மகப்பேறு விடுப்பு 9 மாதத்தில் இருந்து 12 மாதம். மாற்றுத் திறனாளிகளுக்கு 5% வீடுகள். மீன்பிடி தடை காலத்தில் ரூ.8 ஆயிரம் உதவித் தொகை (1.52 லட்சம் பேர் பயன்) **என அண்டை மாநிலங்களும் பின்பற்றும் அற்புதத் திட்டங்கள் பல படைத்துள்ளார்.**

**அனைத்திற்கும் மேலாக, தமிழ்ச் சமுதாயத்தின் தன்னிகரில்லாப் புகழைத் தரணியில் உயர்த்தி நிறுத்திய உத்தமத் தலைவர்களான பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடத்தைப் புதுப்பித்து, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தை நிர்மாணித்து, பகலில் மட்டுமல்லாமல் இரவிலும் பகல்போல் ஒளிர்ந்து தகத்தகாயமாக மிளிர்ந்திடச் செய்து - ” கலைஞர் உலகம் “ எனும் அற்புத அருங்காட்சியகம் ஒன்றை நிலவறைப் பகுதியில் உருவாக்கி உலகத் தரத்தில் படைத்து 26.2.2024 மாலையில் தம் பொற்கரங்களால் திறந்து வைத்து மாபெரும் சரித்திரம் படைத்துள்ளார்.**

இத்தகைய அற்பத் திட்டங்கள் பல தந்த நம் அருமை முதல்வர் அவர்களை - இந்த 71 ஆம் பிறந்த நாளில் பல்லாண்டு வாழ்க,

வாழ்க என வாழ்த்துவோம் !

வாழ்த்துப்பண் பாடுவோம் !

# கடின உழைப்பால் உயர்ந்தவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்!

**சோ**வியத் அதிபர் ஸ்டாலின் மரணத்தை ஒட்டி கழகத்தின் சார்பில் நினைவேந்தல் கூட்டத்தில் கலைஞர் உரையாற்றிக் கொண்டிருந்தபொழுது அவருக்கு மகன் பிறந்ததை துண்டுச் சீட்டின் மூலம் தெரிவிக்கப்பட்டது. உடன் மேடையிலேயே மகனுக்கு ஸ்டாலின் என பெயர் அறிவித்தார்.

இளமையில் தலைவர் கலைஞர் அவர்கள் எப்படி உழைத்தாரோ! அதேபோல் தளபதி ஸ்டாலின் அவர்களின் உள்ளத்தில் தி.மு.கழகத்தின் கொள்கைகள் ஈர்க்கப்பட்டன. எனவே தளபதியும் அந்தக் காலத்திலேயே, தான் வாழ்கின்ற வட்டத்தில், கழகத்தின்பால் பற்றுகொண்ட இளைஞர்களையும் நண்பர்களையும் எல்லாம் ஒன்று திரட்டி கோபாலபுரம் இளைஞர் தி.மு.க. என்ற துணை அமைப்பை வட்டச் செயலாளர் அனுமதியோடு ஏற்படுத்தி, அந்த அமைப்பின் மூலம் அண்ணா பிறந்தநாள் விழாவினை 1966ஆம் ஆண்டு நடத்தினார்.

அதன்பின்னர் 1968ஆம்ஆண்டு அண்ணா பிறந்த நாள் விழாவிற்கு கோபாலபுரம் இளைஞர் தி.மு.க. சார்பாக தளபதி ஸ்டாலினும் கழக நண்பர்களும் சேர்ந்து அண்ணாவை சந்தித்து தேதி கேட்கிறார்கள்.

**தளபதி கேட்ட தேதிக்கு வரமுடியாமல் வேறு தேதியை அண்ணா கொடுக்கிறார். ஆனால், தளபதி ஸ்டாலின் தான் நடத்த வேண்டும் என்று நினைத்த தேதியிலே உறுதியாக இருந்தார். பிறகு அண்ணா அவர்கள் தளபதி கேட்ட தேதியைக் கொடுத்து விட்டு, தளபதி ஸ்டாலினைப் பார்த்து அண்ணா அவர்கள் சொன்னார், “உங்க அப்பாவைப் போல் அடம்பிடித்துக் காரியத்தைச் சாதித்து விட்டாய்” என்று அன்றைக்கே அண்ணா அவர்கள் தளபதியின் விடாமுயற்சியினை பாராட்டினார்கள்.**

**தந்தை கலைஞர் வழியில் நின்று நினைத்த காரியத்தை நடத்தி காட்டும் ஆற்றலாளர் தளபதி ஸ்டாலின் என்பதை அண்ணா அவர்கள் சொன்னது எவ்வளவு தீர்க்கத்தரிசனமான உண்மை என்பதை, இன்று காலம் உணர்த்தியுள்ளது.**

தளபதி அவர்கள் பள்ளி, கல்லூரியில் படிக்கும்போதே முரசொலி பத்திரிக்கைகளை வெளியூருக்கு அனுப்புவது, பின்பு செய்திகளை சேகரிப்பவராக இருந்தது, ‘தினப்பலன்‘ என்ற தலைப்பில் தான் எழுதிய செய்திகள் முரசொலியில் வெளியிடபட்டது

1981 அ.தி.மு.க.வின் எரிசாராய ஊழலை எதிர்த்து போராட்டம் நடத்தியதில் 48 நாட்கள் சிறை தண்டனை பெற்றார். திருமணமாகிய 3 மாதங்களில் தனது 23வது வயதில் மிசா சட்டத்தில் சிறை சென்று காவல்துறையின் அடி உதை சித்தரவதைக்கு உள்ளானார், கர்ப்பிணியான மனைவியை கூட சந்திக்க முடியாத அவல நிலையில் கூட தனதுஇயக்க கொள்கையினை இன்றுவரை விட்டுத் தராமல் பல போராட்டங்கறை தனது இரும்பு நெஞ்சத்துடன் எதிர்கொண்டு வெற்றிபெற்று வருகிறார் நமது தளபதி ஸ்டாலின்.

கழகத்தின் மீது கொண்ட கொள்கை, பற்று, ஆர்வம், உழைக்க வேண்டிய கடமை என்கிற எண்ணம் இருந்த காரணத்தால்தான். “நான் ஒரு தி.மு.க. தொண்டன், கழகத்தில் ஒரு தொண்டனுக்கு என்ன உரிமை இருக்கிறதோ, அந்த உரிமையை எனக்குத் தாருங்கள்“ என்று தளபதி அவர்கள் கலைஞரிடம் கழக பணியாற்ற அனுமதி கேட்டுப் பெற்றார்.

ஆயிரம்விளக்கு பகுதிக்குட்பட்ட 75வது வட்டத்தில் நடைபெற்ற கிளைக் கழக நிர்வாகிகள் தேர்தலில் வெற்றிபெற்று பகுதிப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதன் பிறகு நடைபெற்ற பகுதி கழக நிர்வாகிகள் தேர்தலில், ஆயிரம் விளக்குப் பகுதி கழகத்தின் சார்பாக மாவட்டப் பிரதிநிதியாக வெற்றி பெற்று தேர்ந்தெடுக்கப்பட்டார். அதன் பிறகு நடைபெற்ற மாவட்டக் கழகத் தேர்தலில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்புக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

நான் மாவட்ட செயலாளராக பணிபுரிந்த காலத்தில் தளபதி அவர்கள் முதல்முறையாக 2002ல் விழுப்புரத்தில் நடைபெற்ற கழக மண்டல மாநாட்டினை தலைமையேற்று நடத்தினார்.

இப்படி படிப்படியாக நடைபெற்ற கழகத் தேர்தலில் ஜனநாயக முறைப்படி தலைவர் பொறுப்புக்கு வளர்ந்தார்.



**முனைவர் க.பொன்முடி**
கழக துணைப் பொதுச் செயலாளர்

ஒரு நல்ல சூழ்நிலையை, நல்ல நம்பிக்கையை அடுத்த தலைமுறைக்கு ஏற்படுத்தக்கூடிய இளைஞர்கள் தி.மு.க. இளைஞர் அணியிலே உருவாகிறார்கள் என்பதை அன்றே பேராசிரியர் அவர்கள் குறிப்பிட்டு தளபதி ஸ்டாலின் அவர்களின் அயராத உழைப்பினால் வளர்ந்துவரும் தி.மு.க. இளைஞர் அணியினை பாராட்டி தமது பெருமிதத்தை அன்றே தெரிவித்தார்.

**பேராசிரியர் பெருந்தகை அவர்கள் தளபதியைப் பாராட்டியபோது ஒன்றை அழுத்தமாகச் சொன்னார், “கலைஞருடைய ஆற்றல் ஸ்டாலினுடைய செயலிலே இன்றைய தினம் அரும்பி நிற்பதைப் பார்க்கிறேன்” என்றார்.**



**தலைவர் கலைஞருடைய செயல் திறனோடு ஒப்பிட்டுச் சொன்னது பேராசிரியர் பெருந்தகையவர்கள் தலைவர் கலைஞருடன் அரை நூற்றாண்டுக்கு மேலாக பொது வாழ்க்கையை அருகில் இருந்து பார்த்து வந்தவர்.**

1996ஆம் ஆண்டு சென்னை மேயர் தேர்தல், மு.க.ஸ்டாலினுக்கு மிகப் பெரிய திருப்புமுனை என்றால் மிகையில்லை. பஞ்சாயத்துராஜ் சட்ட திருத்த த்துக்குப் பிறகு நடந்த தேர்தல் என்பதால், முதல் முறையாக மக்களால் நேரடியாக வாக்களித்துத் தேர்வு செய்யப்பட்ட முதல் மேயர் என்ற பெயரைப் பெற்றார். இந்தக் காலத்தில் சென்னை நகரம் புதுப் பொலிவு பெற்றது. அப்போது, தனிநபர்களின் வாகனங்கள் அதிகரிக்கத் தொடங்கின.

இதனால் சென்னையில் போக்குவரத்து நெரிசல் வெகுவாக உயரத் தொடங்கியது. இந்த நெரிசலுக்குத் தீர்வு காணும் வகையில் 10க்கும் மேற்பட்ட மேம்பாலங்கள் மாநகராட்சியால் வடிவமைக்கப்பட்டன. 49 சிறிய பாலங்கள், பூங்கா க்கள், நீரூற்றுகள், மெரினா கடற்கரை அழகுபடுத்துதல், சாலை விரிவாக்கம் போன்ற பல திட்டங்களுக்கு காரண கர்த்தாவாக திகழ்ந்தார்.

தி.மு.க. கொள்கைகளில் எதிர் துருவத்திலிருந்து காஞ்சி ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்கள், ‘தளபதி மேயர் பணியில், மாநகராட்சியின் பள்ளியின் தரம், பெரும் முன்னேற்றம் அடைந்துள்ளது’ என பாராட்டியுள்ளார்.

முன்னாள் இந்திய பிரதமர் திரு வி.பி.சிங் அவர்கள் தளபதி பற்றி குறிப்பிடுகையில் ‘1988ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் தேசிய முன்னணி துவக்க விழாவின்போது நடைபெற்ற மிகப் பிரமாண்டமான ஊர்வலத்தின் ஆரம்பத்தில் வெள்ளுடையணிந்து கையில் கருப்புசிவப்புக் கொடி தூக்கி ஒரு இராணுவத் தளபதியைப் போல் மிடுக்காக நடந்து வந்தாரே, அந்தக் காட்சிக்குரியவர்! இவர் தலைமை தாங்கிவந்த அணி வகுப்பு இராணுவக் கட்டுப்பாடு கொண்ட அணியாக ஊர்வலமாக வந்த காட்சியைத் கண்டு நான் மகிழ்ச்சி அடைந்தேன்” என்று தளபதியை நெஞ்சார வாழ்த்திப் புகழ்ந்தார்.

சென்ற ஆண்டு சென்னையில் நடைபெற்ற தலைவரின் 70வது பிறந்தநாள் விழாவில் இந்நாட்டின் பிரதமராக வரக்கூடிய தகுதி படைத்தவர் ஸ்டாலின்’ என ஜம்மு காஷ்மீர் முன்னாள் முதல்வர் பரூக் அப்துல்லா அவர்கள் கூறினார்.

சட்டப் பேரவை உறுப்பினராக கோட்டைக்கு வந்த தளபதி அவர்கள் தனது தொடர் உழைப்பின் காரணமாக, முதல்வர் பணியினை இப்போது அலங்கரிக்கிறார். ஆனால், இந்தப் பதவிக்கு வேக வேகமாக ஒரே மூச்சில் அவர் வந்து விடவில்லை. மக்கள் பணிக்கான வாய்ப்புகள், அவர்களுக்கான திட்டங்கள் எங்கெல்லாம் தீட்டப்படுகிறதோ அங்கெங்லாம் தனது முத்திரைகளை பதித்த பிறகே, முதல்வர் பதவிக்கு வந்தார்.

தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழக அரசின் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சராகப் பதவி வகித்தபோது 1,75,493 மகளிர் சுய உதவிக் குழுக்களை நிறுவி மாநிலம் முழுவதும் மகளிர் சுயஉதவிக் குழுக்களைப் தொடங்குவதிலும் ஒகேனக்கல் மற்றும் ராமநாதபுரம் போன்ற பல்வேறு கூட்டுக் குடிநீர் திட்டங்களை கொண்டு வந்தார். இதுபோன்று பல்வேறு விரிவான குடிநீர் திட்டங்களையும் அவர் நிறை வேறினார்.

**தற்போது முதலமைச்சரானதும் முதல்வராய் முத்தான சாதனைகள் பெண்களுக்கு:**

கட்டணமில்லா பேருந்து பயணத்திட்டத்தின் மூலம் ஏழை எளிய மகளிரின் வாழ்வாதாரம் மேம்பட்டதுடன் அவர்களது வாழ்வில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தி வருகிறது. இத்திட்டமானது மலைப்பகுதியில் மகளிரும் பயன்பெறும் வகையில் தற்போது விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

மாணவிகளின் உயர்கல்வி தேவையினை பூர்த்தி செய்யவும், அவர்களை மேல்நிலைக்கு கொண்டுவரவும் அரசுப் பள்ளிகளில் பயின்று உயர்கல்வியில் சேரும் ஒவ்வொரு மாணவிக்கும் மாதம் ரூ.1000/ வழங்கும் இத்திட்டத்தின் மூலம் மாணவிகளின் சேர்க்கை விகிதம் அதிகரித்துவருகிறது. இதன்மூலம் அவர்களால் ஏற்படும் குடும்ப நிதித் தேவையும் குறைகிறது. தற்போது இத்திட்டமானது, அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவிகளுக்கும் விரிவுபடுத்தப்பட உள்ளது.

மேலும் அரசுப் பள்ளிகளில் பயின்று உயர்கல்வியில் சேரும் மாணவர்களுக்கும் மாதம் ரூ.1000/ வழங்கும் “தமிழ்மகன்“ என்ற புதிய திட்டம் தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் நாட்டிலேயே உயர்கல்வியில் சேர்ந்து பயிலும் மாணாக்கர்களின் சேர்க்கை சதவிகிதம் எப்பொழுதும் தமிழ்நாடு முதலிடத்திலேயே இருக்கும்.

தொடர்ந்து அதிகரித்துவரும் குடும்ப செலவுகளால் இல்லத்தரசிகள் மேலும் பாதிக்கப்படாமல் இருக்க மாதந்தோறும் ரூ.1000/ குடும்பத்தலைவிகளுக்கு வழங்கப்படும் இந்த மகளிர் உரிமைத் தொகை திட்டம் பெரும்வரவேற்பைப் பெற்று தமிழ்நாட்டில் விடியல் பயணமாக உள்ளது.

பணிபுரியும் மகளிருக்கு விடுதி வசதியினை ஏற்படுத்த “தோழி“ என்ற திட்டம் உருவாக்கப்பட்டு பெருநகரங்களில் விடுதிகள் கட்டப்பட்டுள்ளன.

ஊட்டச்சத்து குறைபாடு இல்லாமலும் அரசுப் பள்ளியில் மாணாக்கர்களின் சேர்க்கையை அதிகரிக்கும் எண்ணத்துடன் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களால் காலை உணவுத் திட்டம், 1ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்புவரை பயிலும் மாணாக்கர்களுக்கு தொடங்கப்பட்டது. இதன்மூலம் மாணவர்களின் வருகை உயர்ந்ததோடு அவர்களின் ஊட்டச்சத்தும் கற்றல் திறனும் வெகுவாக மேம்பட்டுள்ளன.

மாணவர்களின் தொழில்திறனை மேம்படுத்தவும், சுயவேலை வாய்ப்பினை பெறவும் அவரவர் தேர்ந்தெடுக்கும் துறைகளில் முதல்வனாகத் திகழ்ந்து முன்னேற்றமடைய “நான் முதல்வன்“ என்ற முத்தான திட்டத்தினை உருவாக்கி பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு தொழில் நிறுவனங்களுடன் இணைந்து அவரவர் பயிலும் பாடத்திட்டத்துடன் பல்வேறு திறன்மேம்பாட்டு பயிற்சிகள் இலவசமாக அளிக்கப்பட்டு வருகின்றன.

நமது முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் எண்ணத்தில் உதித்த இந்த முத்தான திட்டங்களை மற்ற மாநிலங்களும் பின்பற்றக் கூடிய முன்னோடி திட்டங்களாக உள்ளன.

ஒரு நாட்டின் முன்னேற்றம் என்பது அங்கு வாழும் மகளிரின் சமூக முன்னேற்றத்தின் அடிப்படையிலும் மாணாக்கர்களின் வளர்ச்சியிலும் அமையும் என்பதை ஆழமாக தம்மனதில் பதித்த நமது தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மேற்கண்ட திட்டங்களை வகுத்து உலகிலேயே தமிழ்நாட்டினை அனைத்து நிலைகளிலும் முதலிடமாக கொண்டுவர அயராது பாடுபட்டு வருகிறார்.

**எவனொருவன் அரசியல் கனிவையும், துணிவையும் பணிவையும் பெற்றுக் களத்தில் குதிக்கிறானோ அவனை, அவனது வளர்ச்சியை யாராலும் தடுக்க முடியாது என்ற அண்ணாவின் கூற்றுப்படி துளிர்த்து வளர்ந்தவர்தான் நமது தளபதி மு.க. ஸ்டாலின். ‘ஒரு தந்தை என்ற முறையில் ஸ்டாலின் முன்னேற்றத்திற்கு எந்தவித கடமையையும் நான் ஆற்றவில்லை. ஆனால் ஒரு மகன் என்ற முறையில் தனது கடமைகளை சரிவர செய்து என்னை பெருமைப்பட வைத்திருக்கிறான். இப்படி ஒரு மகன் கிடைக்கப்பெற்றதற்காக நான் மிகவும் பெருமைப்படுகிறேன்’ என்றார் நமது முத்தமிழறிஞர் கலைஞர். சிறுவயது முதல் கால நேரம் பாராமல் தனது கடினமாக உழைப்பால் உயர்ந்துள்ள தலைவர் தளபதி அவர்கள் தனிபெறும் தலைவராய் தமிழ் மொழிப்போல் பல்லாண்டுகாலம் வாழ்ந்து தமிழ்நாட்டு மக்களின் மேம்பாட்டிற்கு தமது திராவிட மாடல் ஆட்சியினை தொடர்ந்து நடத்திட வாழ்த்துகிறேன்.**